ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2314/79 - 2023 ජනවාරි මස 13 වැනි සිකුරාදා - 2023.01.13

*2314/79 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 16/ 2016*

**(358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டம்**

21 ஆம் பிரிவின் கீழான கட்டளை

(358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், தேசிய நலன்கருதி அவசியமானதெனக் கருத்திற்கொண்டு, நிலவுலக நீர்நிலைப் பரப்பாராய்ச்சித்துறை மற்றும் கடற்றுறை நிலப்பட வரைவியலில் விசேடித்த நிபுணத்துவம் கொண்ட இலங்கைக் கடற்படையின் உறுப்பினர்களுக்கு, 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 321 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு சனவரி 6 ஆந் திகதிய 2261/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 6 ஆந் திகதி இலக்க வணிகக் கப்பற்றொழில் (கடற்பயணத்தின் காப்பு), ஒழுங்குவிதிகளிலும், 1981 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, தேசிய நீர்வாழ்வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர்நிலையச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (உஉ) என்னும் பந்தியிலும் ஏற்பாடுசெய்யப்பட்ட அத்தகைய நிலவுலக நீர்நிலைப் பரப்பாராய்ச்சித்துறைசார் செயற்பாடுகளைக் கடற்படைசாராக் கடமைகளாகப் புரியும்படி கட்டளையிடுகின்றேன்.

**ரணில் விக்கிரமசிங்க,**
சனாதிபதி.

கொழும்பு,
2023, சனவரி 09.

EOG 01-0132

1A - G 38576 — 16 (2023/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*